# பிரதமருக்கு "கிராண்ட் கமாண்டர் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் நைஜர்" என்ற தேசிய விருது வழங்கப்பட்டது

நவம்பர் 17, 2024

அரசு மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நைஜீரிய கூட்டாட்சி குடியரசின் அதிபர் மேதகு திரு. போலா அகமது டினுபு, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் ராஜதந்திரம் மற்றும் இந்தியா-நைஜீரியா உறவுகளை வளர்ப்பதில் அவரது சிறந்த பங்களிப்பிற்காக "கிராண்ட் கமாண்டர் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் நைஜர்" என்ற தேசிய விருதை பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு வழங்கினார். பிரதமரின் தொலைநோக்கு தலைமையின் கீழ், இந்தியா ஒரு உலகளாவிய அதிகார மையமாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது என்றும், அவரது மாற்றத்தக்க ஆட்சி அனைவருக்கும் ஒற்றுமை, அமைதி மற்றும் பகிரப்பட்ட செழிப்பை வளர்த்துள்ளது என்றும் விருதுக்கான பாராட்டுப் பத்திரம் குறிப்பிடுகிறது.

2. விருதை ஏற்றுக்கொண்ட பிரதமர், இந்த கவுரவத்தை இந்திய மக்களுக்கும், இந்தியா மற்றும் நைஜீரியா இடையேயான நீண்டகால வரலாற்று நட்புறவுக்கும் அர்ப்பணித்தார். இந்த அங்கீகாரம் இரு நாடுகளுக்கும் இடையிலான மூலோபாய கூட்டாண்மை மற்றும் உலகளாவிய தெற்கின் அபிலாஷைகளுக்கு அவற்றின் பகிரப்பட்ட உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது என்று அவர் மேலும் கூறினார்.

3. 1969-ம் ஆண்டு முதல் இந்த விருதைப் பெறும் முதல் வெளிநாட்டுத் தலைவர் பிரதமர் நரேந்திர மோடி என்பது குறிப்பிடத்தக்கது.

அபுஜா
நவம்பர் **17, 2024**